**நவம்பர் - 29**

**"நம்முடைய நம்பிக்கையை அறிக்கையிடுகிறதில் அசைவில்லாமல் உறுதியாய் இருக்கக்கடவோம்; வாக்குத்தத்தம் பண்ணினவர் உண்மையுள்ளவராயிருக்கிறார்."**

**- எபி 10.23.**

குணத்திற்காகவோ அல்லது வரப்போகிற மகிமைக்காகவோ உள்ள எல்லா நமது நம்பிக்கையையும் எந்த அஸ்திபாரத்தின் மேல் கட்டப்பட்டிருக்கிறதோ, அதுவே தேவனுடைய வாக்குத்தத்தமாகும். இந்தச் சத்தியத்தை உயர்வாக மதிப்போமாக. அதினாலே எந்த அர்த்தத்திலாவது எந்த அளவிலாவது அதை விட்டுக்கொடுக்க மாட்டோம். எழுத்தின்படி மாத்திரமல்லாமல், ஆவியிலும் சத்தியத்தைப் பற்றிக்கொண்டிருப்போமாக. அதாவது, அதன் அன்பிலே ஏனென்றால், அது உண்மையானதும், அழகானதும் மகத்தானதுமாயிருக்கிறது. பொறுமையுடன் கூடிய சகிப்புத் தன்மையின் முக்கியத்துவத்தை எப்பொழுதும் நாம் நினைவு கூறுவோமாக. அதனால் கிறிஸ்தவ குணசீலங்களை விருத்தி செய்வதும், அவைகளை அப்பியாசிப்பது மட்டுமல்லாமல், நம்மேல் வருவதற்கு அனுமதிக்கத் தகுதியானதென்று தேவன் பார்க்கிற சோதனைகளையும், உபத்திரவங்களையும், கஷ்டங்களையும் சந்தோஷமாக அனுபவிக்கலாம். இவைகள் நம்மை சோதிப்பதற்காகவும், குண அபிவிருத்திக்காகவும் மிகவும் முக்கியமானதென்று நமக்கு விபரிக்கின்றார். அவைகளில்லாமல், பூரண அன்பைப் பெறவும் அதைப் பரிபாலிக்கவும் கூடாது. **- Z ’01, 119 (R 2790).**

இங்கே சொல்லியிருக்கிற "நம்பிக்கை" சத்தியம் என்ற அர்த்தத்தை கொண்டிருக்கிறது. (யூதா 3) தடுப்பதற்குரிய இடையூறுகள் எவ்வளவு பெரியதாயிருந்தாலும், நாம் சத்தியத்தை தைரியமாகவும், பயமில்லாமலும், உறுதியாயும் அறிக்கையிடுகிறதில் விடாமுயற்சியுடனிருக்க வேண்டும் என்ற கருத்தை அப்போஸ்தலன் கொண்டிருக்கிறார். இந்த அதிகாரத்தில் அப்போஸ்தலன் முதலாவது, யேசுவை பரிசுத்த ஸ்தலத்திலும், மகா பரிசுத்த ஸ்தலத்திலும் இருக்கிறதாக விபரிக்கின்றார். பிறகு மற்ற கீழான ஆசாரியர்களும் பரிசுத்த ஸ்தலத்தில் இருக்கிறதாக விபரிக்கிறார். நம்முடைய மூலவாக்கியத்தில் குத்து விளக்கின் முன்னடையாளத்தின் கருத்தைக் கொடுக்கிறார். குத்து விளக்கு வெளிச்சத்தைக் கொடுப்பதிலுள்ள தனது தகுதியில் சபையைக் குறிக்கிறதாகக் காண்பிக்கிறார். அது தனது வெளிச்சத்தை பிரகாரத்திலுள்ளவர்களுக்கோ, பாளையத்திலுள்ளவர்களுக்கோ கொடுக்காமல், பரிசுத்த ஸ்தலத்தில் உள்ளவர்களுக்கு மட்டும் கொடுக்கிறது. இவ்விதமாகப் பார்ப்போமானால், மாம்சத்தில் ஆசாரியத்துவம் ஆழமான காரியங்களில் ஒருவரை ஒருவர் பிரகாசிப்பிக்கிற வேலையை உடையதாயிருக்கும் என்று நாம் கண்டு கொள்கிறோம். அவருடைய நல்ல வேளையில் உண்மையாகவும், உறுதியாகவும் விடாமல் முயற்சி செய்கிறவர்களுக்குத் தேவன் தனது தயவைக் கொடுப்பதாக வாக்குத்தத்தம் செய்கிறார். தன்னுடைய வாக்குத்தத்தங்களை நிறைவேற்றுவதில் எல்லாச் சந்தர்ப்பங்களிலும் உண்மையுள்ளவராயிருக்கிறதை நிச்சயமாகவே அவர் நிரூபிப்பார்.
**- P ’34, 160.**

**ஒத்த வாக்கியங்கள் :-**

**எபி 4:14; 1கொரி 1:17,18,21,31,27-29; 2:1-8,12,13; 14:1-25; 2கொரி 2:14-16; 3:12,13; கொலோ 1:23-29; 1தெச 2:3-12; 2தீமோ 2:15; தீத் 3:8,9; சங் 57:7; மத் 10:22; 1கொரி 15:58; எபி 13:9; உபா 7:8,9; யோசு 23:14; 2சாமு 7:28; 1ராஜா 8:23,24,56; சங் 89:1,2,5,8,14,24,28,33,34; ஏசா 54:9,10.**

**கோபுர வாசிப்பு : Z ’14, 211 (R 5497).**

**வினாக்கள் : இந்த வாரத்தில் சத்தியத்தை எடுத்துக் கூறுவதில் விடாப்பிடியாக முயற்சி செய்தேனா? அதில் தாம் உண்மையுள்ளவர் என்பதை எவ்விதம் தேவன் காட்டினார்? அதன் பலன் என்ன?**